**டிசம்பர் – 31**

# தேசியச் செய்திகள்

## புள்ளி விவரங்களுக்கான நிலைக்குழு

- ❖ மத்தியப் புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்குதல் துறை அமைச்சகமானது புள்ளி விவரங்களுக்கான நிலைக்குழு ஒன்றை அமைத்துள்ளது.
- ❖ இந்தக் குழுவின் நோக்கம் அரசாங்கத்தின் தரவை மேம்படுத்துவதாகும்.
- ❖ இந்த அனைத்து தரவுத் தரங்களை மாற்றியமைத்த பின்னர் 2020 - 21ல் கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று இந்த அமைச்சகம் அப்போது அறிவித்திருந்தது.

*இக்குழு பற்றி*

- ❖ இந்தக் குழுவானது முன்னாள் தலைமைப் புள்ளி விவர நிபுணரான புரோனாப் சென் என்பவரால் தலைமை தாங்கப் படுகின்றது.
- ❖ இந்தக் குழுவானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் தேதியன்று சந்திக்க இருக்கின்றது.
- ❖ இக்குழுவில் சுமார் 28 உறுப்பினர்கள் உள்ளனர்.
- ❖ மேலும், இந்தக் குழுவானது நான்கு நிலைக் குழுக்களை உள்ளடக்கியுள்ளது. அவையாவன:
    - தொழிலாளர் சக்தி புள்ளி விவரங்கள்,
    - தொழில்துறை புள்ளி விவரங்கள்,
    - சேவைகள் துறை,
    - முறைப்படுத்தப் படாத துறைசார் நிறுவனங்கள்.

## முப்படையின் தலைமைத் தளபதி

- ❖ 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அன்று, இந்திய ராணுவத் தளபதி பிபின் ராவத் முப்படைகளின் முதலாவது தலைமைத் தளபதியாக (Chief of Defence Staff – CDS) நியமிக்கப் பட்டுள்ளார்.
- ❖ இவர் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை முதலாவது CDS ஆகப் பணியாற்றுவார்.
- ❖ இவர் சமீபத்தில் இராணுவத் தளபதியாக ஓய்வு பெற்றார். இவருக்குப் பதிலாக ஜெனரல் மனோஜ் முகுந்த் இந்திய ராணுவத்தின் தலைமைத் தளபதியாக நியமிக்கப் பட்டுள்ளார்.
- ❖ அண்மையில், மத்திய அமைச்சரவையானது 3 ஆண்டு கால பதவிக் காலத்துடன் நான்கு நட்சத்திர அந்தஸ்து கொண்ட முப்படையின் தலைமைத் தளபதி பதவியினை உருவாக்கிட ஒப்புதல் அளித்தது.
- ❖ CDSன் ஊதியம் மற்றும் சலுகைகள் மற்ற ராணுவச் சேவைகளின் தலைவருக்குச் சமமானதாகும்.
- ❖ CDS பதவியில் உள்ளவர் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகத்தில் உருவாக்கப்படவுள்ள இராணுவ விவகாரத் துறைக்கும் தலைமை தாங்க இருக்கின்றார்.
- ❖ இவர் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சரின் இராணுவ ஆலோசகராகவும் செயல்பட இருக்கின்றார்.

*CDS பற்றி*

- உலக நாடுகளில் இத்தாலி, பிரான்சு, சீனா, ஸ்பெயின், இங்கிலாந்து, கனடா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முப்படையின் தலைமைத் தளபதியைக் கொண்டிருக்கும் மற்ற நாடுகளாகும்.
- 1999 ஆம் ஆண்டு ஏற்பட்ட கார்கில் போரைத் தொடர்ந்து, சுப்பிரமணியம் தலைமையிலான கார்கில் சீராய்வுக் குழுவின் பரிந்துரைகள் மூலம் இது அதிகாரப் பூர்வமாகப் பரிந்துரைக்கப்பட்டது.

*நான்கு நட்சத்திர அந்தஸ்து*

- இந்தியாவில் நான்கு நட்சத்திர அந்தஸ்தானது 5 அதிகாரிகளுக்கு வழங்கப் படுகின்றது.
- இதில் இந்தியக் கடற்படைத் தலைவர், இந்திய விமானப் படையின் தலைவர், இந்திய ராணுவத்தின் தலைமைத் தளபதி மற்றும் புலனாய்வு அமைப்பின் இயக்குநர் ஆகியோர் அடங்குவர்.
- https://www.tnpscthervupettagam.com/currentaffairs-detail/creation-of-a-chief-of-defence-staff/chief

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## லாங் மார்ச் - 5

- சீனா தனது மிகப்பெரிய செயற்கைக் கோள் தாங்கி விண்கலனான லாங் மார்ச் - 5ஐ வென்ச்சாங் விண்வெளி ஏவு மையத்திலிருந்து வெற்றிகரமாக ஏவியுள்ளது.
- சீனாவின் மிக சக்திவாய்ந்த இந்த விண்கலனானது அந்நாட்டின் முதன்மையான விண்வெளித் திட்டத்தில் ஒரு முக்கியமான அங்கமாக விளங்குகின்றது.
- இது ஷிஜியன் - 20 என்ற செயற்கைக் கோளை விண்ணுக்கு எடுத்துச் சென்றது.

*லாங் மார்ச் - 5 பற்றி*

- இந்த விண்கலனானது சீனாவின் மிகவும் எடையுள்ள மற்றும் மிகவும் மேம்பட்ட தகவல் தொடர்புச் செயற்கைக்கோள் ஆகும்.
- இந்த விண்கலனானது CZ - 5 என்றும் அழைக்கப் படுகின்றது.
- இது அதிகபட்சமாக 25 டன் எடை கொண்ட செயற்கைக் கோளை புவியின் தாழ் சுற்றுவட்டப் பாதைக்கும் 14 டன் எடை கொண்ட செயற்கைக் கோளை புவிசார் ஒத்திசைவு சுற்றுப்பாதைக்கும் கொண்டு செல்லும் திறன் கொண்டது.
- இந்த வெற்றிகரமான ஏவுதலானது 2020 ஆம் ஆண்டில் செவ்வாய் கிரகத்திற்கு அனுப்ப இருக்கும் சீனாவின் திட்டமிட்ட பணிக்கான ஒரு முக்கிய மைல்கல்லாக விளங்குகின்றது.


## வருடாந்திர சூரிய கிரகணம்

- டிசம்பர் 26 அன்று, இந்தியா, ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ், சவுதி அரேபியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வருடாந்திர சூரிய கிரகணம் காணப்பட்டது.
- மொத்த சூரிய கிரகணம் - சூரியனின் முழு மையப் பகுதியும் சந்திரனால் தடுக்கப் படுகின்றது.
- பகுதி சூரிய கிரகணம் - சூரியனின் மேற்பரப்பின் ஒரு பகுதி மட்டுமே தடுக்கப் படுகின்றது.
- சூரிய கிரகணங்கள் ஒவ்வொரு 18 மாதங்களுக்கு ஒரு முறையும் நிகழ்கின்றன.

ஆனால் இவை சில நிமிடங்களுக்கு மட்டுமே நீடிக்கும்.

*வருடாந்திர சூரிய கிரகணம் பற்றி*

- சந்திரன் பூமியிலிருந்து வெகு தொலைவில் இருக்கும் போது வருடாந்திர சூரிய கிரகணம் நிகழ்கின்றது. இதனால் தான் சந்திரன் சிறியதாகத் தெரிகின்றது.
- இந்த வகை கிரகணத்தில், சந்திரன் சூரிய ஒளியை முற்றிலுமாகத் தடுக்காது. ஆனால் "நெருப்பு வளையம்" ஒன்று உருவானதைப் போல் "ஒரு பெரிய சூரிய நிற வட்டுக்கு மேல் இருண்ட வட்டு" போல அது காட்சி அளிக்கின்றது.








# சுற்றுச்சூழல் செய்திகள்

## Bt கத்தரிக்காய் - சட்டவிரோத சாகுபடி

- ஹரியானாவில் சட்டவிரோத Bt கத்திரிக்காய் சாகுபடி பயிரிடப் பட்டது (மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காய்) சமீபத்தில் உறுதி செய்யப்பட்டது.
- இதன் மாதிரிகள் ஹரியானாவின் மாநில அரசாங்கத்தால் தேசியத் தாவர மரபணு வள ஆய்வகத்திற்கு (National Bureau of Plant Genetic Resources - NBPGR) அனுப்பப் பட்டுள்ளன.
- சீனாவிற்கு அடுத்தபடியாக கத்தரிக்காய் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இந்த மரபணு மாற்றப்பட்ட கத்திரிக்காயான Bt வகை கத்திரிக்காய்கள் 2009 ஆம் ஆண்டில் மரபணுப் பொறியியல் மதிப்பீட்டுக் குழுவால் (Genetic Engineering Appraisal Committee - GEAC) அங்கீகரிக்கப்பட்டது.
- ஆனால் இதன் ஒப்புதல் 2010 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் நிராகரிக்கப் பட்டது.
- GEAC சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986ன் கீழ் மத்திய சுற்றுச்சூழல் மற்றும்

வனத்துறை அமைச்சகத்தின் ஒரு சட்டரீதியான அமைப்பாகச் செயல்படுகின்றது.

- இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட மரபணு மாற்றப்பட்ட ஒரே பயிர் 2002 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப் பட்ட Bt வகை பருத்தி மட்டுமேயாகும்.
- தாரா கலப்பினக் கடுகு - 11 அல்லது டிஎம்எச் - 11 என்பது ஒரு மரபணு மாற்றப்பட்ட கடுகு வகை ஆகும். இது தில்லி பல்கலைக் கழகத்தின் பயிர்த் தாவரங்களின் மரபணு கையாளுதலுக்கான மையத்தால் உருவாக்கப் பட்டுள்ளது.
- மத்திய அரசால் இது அங்கீகரிக்கப்பட்டால், இது Bt பருத்திக்குப் பிறகு இரண்டாவது மரபணு மாற்றப்பட்ட பயிராகவும் நாட்டில் சாகுபடிக்கு அனுமதிக்கப்பட்ட முதலாவது மரபணு மாற்றப்பட்ட உணவு வகைப் பயிராகவும் உருவெடுக்க கூடும்.




(In million hectares)

**Global Area of Biotech Crops**

| | 2010 | 2011 | 2012 | Crops |
|---|---|---|---|---|
| US | 66.8 | 69 | 69.5 | Maize, Soyabean, Cotton, Sugarbeet, Papaya, Squash |
| Brazil | 25.4 | 30.3 | 36.6 | Soyabean, Maize, Cotton |
| Argentina | 22.9 | 23.7 | 23.9 | Soyabean, Maize, Cotton |
| Canada | 8.8 | 10.4 | 11.6 | Canola, Maize, Soyabean, Sugarbeet |
| India | 9.4 | 10.6 | 10.8 | Cotton |
| China | 3.5 | 3.9 | 4 | Cotton, Papaya, Poplar, Tomato, Sweet pepper |
| Total* | 148 | 160 | 170.3 | |

*includes 22 other countries such as Paraguay, South Africa, Pakistan and Uruguay.
Source: Clive James

## ஃபாஸ்டா - உலகின் மிகப் பழமையான காண்டாமிருகம் இறப்பு

- உலகின் மிகப் பழமையான காண்டாமிருகம் என்று நம்பப்பட்ட ஃபாஸ்டா என்ற கருப்பு நிறம் கொண்ட பெண் காண்டாமிருகமானது தனது 57வது வயதில்

தான்சானியாவின் இயற்கைப் பாதுகாப்பு பகுதியில் இறந்துள்ளது.

- ஃபாஸ்டா காண்டாமிருகமானது இயற்கைக் காரணங்களினால் நாகோரோங்கோரோ இயற்கைப் பாதுகாப்பு ஆணையப் பகுதியில் காலமானது.
- காடுகளில் வாழும் காண்டாமிருகத்தின் எதிர்பார்க்கப் படும் ஆயுட்காலம் சுமார் 40 ஆண்டுகளாகும். ஆனால் இவை அடைத்து வைத்து வளர்க்கப்பட்டால் கூடுதலாக பத்து ஆண்டுகள் உயிர் வாழும் திறன் கொண்டுள்ளன.


*கருப்பு காண்டாமிருகம் பற்றி*

- இது 'கருப்பு மூக்குக் கொம்பு காண்டாமிருகம்' என்றும் அழைக்கப் படுகின்றது.
- இவை கென்யா, தான்சானியா, நமீபியா, தென்னாப்பிரிக்கா மற்றும் ஜிம்பாப்வே உள்ளிட்ட தெற்கு மற்றும் கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதிகளைச் சுற்றிலும் காணப் படுகின்றன.
- பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் சிவப்புப் பட்டியலில் இதன் நிலை: மிக அருகி வரும் இனம் (தென்மேற்கு கருப்பு காண்டாமிருகம் பாதிக்கப்படக் கூடியது என வகைப்படுத்தப் பட்டாலும்).

# மாநிலச் செய்திகள்

## ஜார்க்கண்ட் மாநில முதல்வர்

- ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சித் தலைவரான ஹேமந்த் சோரன் ஜார்க்கண்ட் மாநிலத்தின் 11வது முதல்வராக பதவியேற்றுள்ளார்.
- ஜார்க்கண்ட் மாநில ஆளுநரான திரௌபதி முர்மு ஹேமந்த் சோரனுக்கு பதவியேற்பு பிரமாணத்தையும் ரகசியக் காப்புப் பிரமாணத்தையும் செய்து வைத்தார்.




## ஜம்மு காஷ்மீர் இணைப்பு தினம் - பொது விடுமுறை தினம்

- ஜம்மு காஷ்மீரின் ஒன்றியப் பிரதேச அரசானது 1947 ஆம் ஆண்டு அக்டோபர் 26ல் ஜம்மு காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்த தினத்தை 2020 ஆம் ஆண்டிற்கான ஆங்கில ஆண்டின் ஒரு பொது விடுமுறை தினமாக அறிவித்துள்ளது.

- 2020 ஆம் ஆண்டின் ஆங்கில ஆண்டிற்கான விடுமுறைப் பட்டியலானது ஜம்மு காஷ்மீர் அரசின் பொது நிர்வாகத் துறையால் வெளியிடப்பட்டது.
- இந்த உத்தரவின் படி, ஜூலை 13ம் தேதியன்று அனுசரிக்கப்படும் தியாகிகள் தினத்தன்றும் டிசம்பர் 5 ஆம் தேதி அனுசரிக்கப்படும் ஷேக் அப்துல்லாவின் பிறந்த தினத்தன்றும் அரசு விடுமுறை அங்கு இருக்காது.
- 1947 ஆம் ஆண்டு அக்டோபர் 26 தேதியன்று, மகாராஜா ஹரி சிங் அப்போதைய இந்திய ஆளுநர் ஜெனரலான மவுண்ட்பேட்டனுடன் ஒரு இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்னர் ஜம்மு காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்தது.
- இந்த ஒப்பந்தமானது ஜம்மு காஷ்மீரைப் பொறுத்தவரை பாதுகாப்பு, வெளி விவகாரங்கள் மற்றும் தகவல்தொடர்பு ஆகிய விவகாரங்களில் மட்டுமே சட்டங்கள் இயற்றும் அதிகாரத்தை இந்திய நாடாளுமன்றத்திற்கு வழங்கியுள்ளது.
- இதைப் பயன்படுத்தி, 370வது பிரிவானது இந்திய அரசியலமைப்பில் இணைக்கப் பட்டது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## கவிஞர்களின் தேசியக் கருத்தரங்கு - 2020

- அகில இந்திய வானொலியானது 2020 ஆம் ஆண்டின் கவிஞர்களின் ஒரு தேசியக் கருத்தரங்கை ஏற்பாடு செய்தது.
- இத்தகைய தேசியக் கருத்தரங்கானது 1956 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.
- இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டு உள்ள அனைத்து 22 மொழிகளைச் சேர்ந்த கவிஞர்களும் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்கின்றார்கள்.

### *அகில இந்திய வானொலி பற்றி*

- அகில இந்திய வானொலியானது (All India Radio - AIR) 1936 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது பிரசார் பாரதியின் (இந்தியாவின் மிகப்பெரிய பொது ஒளிபரப்பு நிறுவனம்) ஒரு பிரிவாகும்.
- AIR என்பது இந்தியாவின் தேசிய வானொலி ஒலிபரப்பாகும்.
- இது 1956 ஆம் ஆண்டு முதல் ஆகாஷ்வானி என்று அதிகாரப் பூர்வமாக அழைக்கப் படுகின்றது.
- இது 23 மொழிகளிலும் 179 பேச்சுவழக்குகளிலும் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகின்றது.

# விளையாட்டுச் செய்திகள்

## கொனேரு ஹம்பி - உலக துரித முறை செஸ் சாம்பியன்ஷிப்

- ரஷ்யாவின் மாஸ்கோவில் நடைபெற்ற உலக மகளிர் துரித முறை செஸ் சாம்பியன்ஷிப்பில் இந்திய கிராண்ட் மாஸ்டரான கொனேரு ஹம்பி வெற்றி பெற்றார்.
- சீனாவின் லீ டிங்ஜிக்கு எதிராக ஆர்மெக்கெடோன் போட்டியில் வெற்றி பெற்ற பின்னர் இவர் இந்தப் பட்டத்தை வென்றார்.
- 2017 ஆம் ஆண்டில் வெற்றி பெற்ற விஸ்வநாதன் ஆனந்திற்குப் பிறகு துரித முறைப் போட்டியில் தங்கத்தை வென்ற தற்போதைய இரண்டாவது இந்தியர் ஹம்பி மட்டுமே

ஆவார்.

❖ உலக துரித முறை  செஸ் சாம்பியன்ஷிப் என்பது 1987 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் ஒரு செஸ் போட்டியாகும்.


Humpy Koneru

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★